22.ஒரு சாதாரண சங்கேதமொழியில் ஓர் உருவினை மாற்றியமைக்க எண்ணால் எழுதப் பயன்படுத்தப்படும் சார்பு $f(x) = 3x - 4$. இச்சார்பின் நேர்மாறினையும், அந்நேர்மாறு ஒரு சார்பு என்பதையும் காண்க. அவை $y = x$ என்ற நேர்க்கோட்டில் சமச்சீர் உடையது என்பதை வரைந்து காண்க.

$\text{f}(x) = 3x - 4 \Longrightarrow y = 3x - 4 \Longrightarrow x = \frac{y+4}{3}$

$\Longrightarrow g(y) = \frac{y+4}{3}$

$(\text{gof})(x) = g[3x - 4] = \frac{3x-4+4}{3} = x$

$(\text{fog})(y) = f\left[\frac{y+4}{3}\right] = 3\left(\frac{y+4}{3}\right) - 4 = y$

$\because gof = I_x \,, fog = I_y$

f மற்றும் g ஆகியவை இருபுறச்சார்பாகவும் ஒன்றுக்கொன்று நேர்மாறாகவும் உள்ளது.

$f^{-1}(y) = \frac{y+4}{3}$; $f^{-1}(x) = \frac{x+4}{3}$

$y = 3x - 4$

X	-1	0	1
y	-7	-4	-1

$y = \frac{x+4}{3}$

X	-1	2	5
y	1	2	3

$y = x$

X	-1	0	1
y	-1	0	1



23.கொடுக்கப்பட்டுள்ள $y = x^3$ என்ற வளைவரையின் படத்தினைப் பயன்படுத்தி அச்சு மாறாமல் ஒரே தளத்தில் கீழ்க்காணும் சார்புகளை வரைக.

i) $y = -x^3$ ii) $y = x^3 + 1$ iii) $y = x^3 - 1$ iv) $y = (x+1)^3$



i) $y = x^3$ என்ற வரைபடம் y அச்சை பொறுத்து பிரதிபலிப்பதே $y = -x^3$ ஆகும்.

ii) $y = x^3$ என்ற வரைபடத்தை 1 அலகு நிலைக்குத்தாக மேல்நோக்கி நகர்த்துவதால் கிடைப்பதே $y = x^3 + 1$-ன் வரைபடம்.

iii) $y = x^3$ என்ற வரைபடத்தை 1 அலகு நிலைக்குத்தாக கீழ்நோக்கி நகர்த்துவதால் கிடைப்பதே $y = x^3 - 1$-ன் வரைபடம்.

iv) $y = x^3$ என்ற வரைபடத்தை 1 அலகு கிடைமட்டமாக இடப்பக்கமாக நகர்த்துவதால் கிடைப்பதே $y = x^3 - 1$-ன் வரைபடம்.



24.கொடுக்கப்பட்டுள்ள $y = x^{1/3}$ என்ற வளைவரையின் படத்தினைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சார்புகளை ஒரே தளத்தில் வரைக.

i) $y = -x^{1/3}$ ii) $y = x^{1/3} + 1$ iii) $y = x^{1/3} - 1$ iv) $y = (x+1)^{1/3}$



i) $y = x^{1/3}$ என்ற வளைவரையின் x அச்சினைப் பொறுத்த பிரதிபலிப்பே $y = -x^{1/3}$-ன் வரைபடம் ஆகும்.

ii) $y = x^{1/3}$ என்ற வரைபடத்தை 1 அலகு நிலைக்குத்தாக மேல்நோக்கி நகர்த்துவதால் கிடைப்பதே $y = x^{1/3} + 1$-ன் வரைபடம்.

iii) $y = x^{1/3}$ என்ற வரைபடத்தை 1 அலகு நிலைக்குத்தாக கீழ்நோக்கி நகர்த்துவதால் கிடைப்பதே $y = x^{1/3} - 1$-ன் வரைபடம்.

iv) $y = x^{1/3}$ என்ற வரைபடத்தை 1 அலகு கிடைமட்டமாக இடப்பக்கமாக நகர்த்துவதால் கிடைப்பதே $y = (x+1)^{1/3}$ -ன் வரைபடம்.



25.ஒரே தளத்தில் $f(x) = x^3$ மற்றும் $g(x) = \sqrt[3]{x}$ சார்புகளை வரைபடமாக்குக. fog-ஐ கணித்து அதே தளத்தில் வரைபடமாக்குக. முடிவுகளை ஆய்வு செய்க.

$f(x) = x^3$

x	-2	-1	0	1	2
$y = x^3$	-8	-1	0	1	8

$g(x) = \sqrt[3]{x} == x^{1/3}$

x	-8	-1	0	1	8
$y = x^{1/3}$	-2	-1	0	1	2

$(fog)(x) = f[g(x)] = f\left(x^{1/3}\right) = x$

x	-2	-1	0	1	2
y	-2	-1	0	1	2



26. $y = \sin x$ என்ற சார்பினை வரைந்து அதன்மூலம் i) $y = \sin(-x)$ ii) $y = -\sin(-x)$ iii) $y = \sin(\frac{\pi}{2} + x)$ iv) $y = \sin(\frac{\pi}{2} - x)$ ஆகியவற்றை வரைக.

$y = \sin x$

x	-2π	$-3\pi/2$	$-\pi$	$-\pi/2$	0	$\pi/2$	π	$3\pi/2$	2π
y	0	1	0	-1	0	1	0	-1	0

i) $y = \sin x$ என்ற வரைபடத்தின் x அச்சினைப் பொறுத்த பிரதிபலிப்பே $y = \sin(-x)$-ன் வரைபடம் ஆகும்.

ii) $y = -\sin(-x)$ என்பது $y = \sin x$-க்கு சமம்.

iii) $y = \sin(\frac{\pi}{2} + x)$ மற்றும் $y = \sin(\frac{\pi}{2} - x)$ என்பவற்றின் வரைபடங்கள் $y = \cos x$-க்கு சமம்.



27. $y = x$ என்ற கோட்டின் மூலம் i) $y = -x$ ii) $y = 2x$ iii) $y = x + 1$ iv) $y = \frac{1}{2}x + 1$ v) $2x + y + 3 = 0$ ஆகியவற்றை தோராயமாக வரைக.

$y = x$

x	-1	0	1
$y = x$	1	0	-1

$y = x$ என்ற கோட்டின் x அச்சினைப் பொறுத்த பிரதிபலிப்பே $y = -x$ -ன் வரைபடம் ஆகும்.

$y = x$ என்பது 2ஆல் பெருக்கப்படுவதால் $y = 2x$ என்ற நேர்க்கோடானது y அச்சை நெருங்கும்.

$y = x$ என்பது 1 ஆல் கூட்டப்படுவதால் 1 அலகு மேல்நோக்கி நகர்வதால் $y = x + 1$-ன் வரைபடம் கிடைக்கும்.

$y = x$ என்பது $\frac{1}{2} < 1$ ஆல் பெருக்கப்படுவதால் x அச்சை நெருங்கும், மேலும் 1 கூட்டப்படுவதால் 1 அலகு நிலைக்குத்தாக மேல்நோக்கி நகரும்.

$y = x$ என்பது $-2 < 1$ ஆல் பெருக்கப்படுவதால் x அச்சை நெருங்கும், மேலும் -3 கூட்டப்படுவதால் 3 அலகு நிலைக்குத்தாக கீழ்நோக்கி நகரும்.



28. $y = \sin x$ என்ற வளைவரை மூலம் $y = \sin|x|$ என்பதன் வரைபடத்தை வரைக.

[இங்கு $\sin(-x) = -\sin x$]

$y = \sin|x| \Rightarrow y = \sin x\,; x \geq 0$

x	-2π	$-{}^{3\pi}/_{2}$	$-\pi$	$-{}^{\pi}/_{2}$	0	${}^{\pi}/_{2}$	π	${}^{3\pi}/_{2}$	2π
y	0	1	0	-1	0	1	0	-1	0

$y = \sin|x| \Rightarrow y = -\sin x\,; x \leq 0$

x	-2π	$-{}^{3\pi}/_{2}$	$-\pi$	$-{}^{\pi}/_{2}$	0	${}^{\pi}/_{2}$	π	${}^{3\pi}/_{2}$	2π
y	0	-1	0	1	0	-1	0	1	0



$y = \sin|x| \Rightarrow y = \sin x\,; x \geq 0$ என்பது $y = sinx$ என்பதன் வரைபடத்திற்கு சமம்.

$y = \sin|x| \Rightarrow y = -\sin x\,; x < 0$ என்பது $y = sinx$-ன் x அச்சின் பிரதிபலிப்பு ஆகும்.

29. $y = x^2$ என்ற வளைவரையிலிருந்து $y = 3(x-1)^2 + 5$ என்ற வளைவரையை காணும் படிநிலைகளை எழுதுக.

$i)$ $y = x^2$-ன் வரைபடம் வரைக.

$ii)$ $y = (x-1)^2$ என்பதால் 1 அலகு வலப்பக்கம் நகரும்.

$iii)$ $y = (x-1)^2$ என்பது 3அல் பெருக்கப்படுவதால், வளைவரையானது y அச்சை நோக்கி நெருக்கும்.

$iv)$ $y = 3(x-1)^2$ உடன் 5 கூட்டப்படுவதால், வளைவரையானது 5 அலகுகள் நிலைக்குத்தாக மேல் நோக்கி நகரும்.

30. $y = |x|$ என்ற வளைவரையின் மூலம் $i) y = |x-1| + 1$ $ii)$ $y = |x+1| - 1$ $iii) y = |x+2| + 3$ ஆகியவற்றை வரைக.

$y = |x|$

x	-2	-1	0	1	2
$y = \|x\|$	2	1	0	1	2

$i) y = |x-1| + 1$ எனும் வளைவரையானது வலப்பக்கமாக 1 அலகு மற்றும் மேல்நோக்கியும் 1 அலகு நகரும்.

$ii)$ $y = |x+1| - 1$ எனும் வளைவரையானது இடப்பக்கமாக 1 அலகு மற்றும் கீழ்நோக்கியும் 1 அலகு நகரும்.

$iii) y = |x+2| + 3$ எனும் வளைவரையானது இடப்பக்கமாக 2 அலகு மற்றும் மேல்நோக்கி 3 அலகும் நகரும்.



31.மக்கள்தொகை 5000 உள்ள ஒரு நகரத்தில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், மொழி A தெரிந்தவர்கள் 45%, மொழி B தெரிந்தவர்கள் 25%, மொழி C தெரிந்தவர்கள் 10%, A மற்றும் B மொழிகள் தெரிந்தவர்கள் 5%, B மற்றும் C மொழிகள் தெரிந்தவர்கள் 4%, A மற்றும் C மொழிகள் தெரிந்தவர்கள் 4% ஆகும்.இதில் மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள் 3% எனில், மொழி A மட்டும் தெரிந்தவர்கள் எத்தனை பேர்?



மொழி A மட்டும் தெரிந்தவர்கள் %=39

மொழி A மட்டும் தெரிந்தவர்கள் எண்ணிக்கை $= \frac{39}{100} \times 5000$
$= 1950$

2. அடிப்படை இயற்கணிதம்

1. $\sqrt{3}$ ஒரு விகிதமுறா எண் எனக்காட்டுக.

$\sqrt{3}$ ஒரு விகிதமுறு எண் எனக்கொள்க.

$\Rightarrow \sqrt{3} = \frac{m}{n}, m, n$ ஆகியவை 1-ஐ விட வேறு பெரிய பொதுக்காரணி இல்லாத இயலெண்கள்

$\Rightarrow \sqrt{3}n = m,$

இருபுறமும் வர்க்கப்படுத்த, $m^2 = 3n^2$, m ஒரு மூன்றின் மடங்கான எண்.

$m = 3k$ என்க.

$(3k)^2 = 3n^2 \Rightarrow 9k^2 = 3n^2 \Rightarrow n^2 = 3k^2, n$ ஒரு மூன்றின் மடங்கான எண்.

m மற்றும் n-ன் பொதுக்காரணி 3-ஆக மாறுகிறது.

இது முரண்பாடு.

$\therefore$ $\sqrt{3}$ ஒரு விகிதமுறா எண் ஆகும்.

2.ஒரு உற்பத்தியாளர் 12 விழுக்காடு அமிலம் கொண்ட 600 லிட்டர் கரைசல் வைத்திருக்கிறார். இதனுடன் எத்தனை லிட்டர்கள் 30 விழுக்காடு அமிலத்தை கலந்தால் 15 விழுக்காட்டிற்கும் 18 விழுக்காட்டிற்கும் இடைப்பட்ட அடர்த்தி கொண்ட அமிலம் கிடைக்கும்?

x லிட்டர் என்பது தேவைப்படும் 30% அமிலம் என்க.

மொத்த கரைசலின் அளவு= $600 + x$

15% -ம் 18% -ம் இடைப்பட்ட அடர்த்தி கொண்ட அமிலத்தின் அளவு

$= [x$-ல் $30\% + 600$-ல்$12\%] > (600 + x)$-ல் 15% ;

$[x$-ல் $30\% + 600$-ல்$12\%] < (600 + x)$-ல் 18%

x-ல் $30\% + 600$-ல்$12\%] >$ $(600 + x)$-ல்15% $\Rightarrow (x \times \frac{30}{100}) + (600 \times$	xல் $30\% + 600$ல்$12\%] <$ $(600 + x)$ல் 18% $\Rightarrow (x \times \frac{30}{100}) + (600 \times$

$\frac{12}{100}) > (600+x)\frac{15}{100}$ $\Rightarrow \frac{30x}{100}+\frac{7200}{100} > \frac{9000+15x}{100}$ $\div 100 \Rightarrow 30x+7200 > 9000+15x$ $\Rightarrow 30x-15x > 9000-7200$ $\Rightarrow 15x > 1800$ $\div 15 \Rightarrow x > 120$	$\frac{12}{100}) < (600+x)\frac{18}{100}$ $\Rightarrow \frac{30x}{100}+\frac{7200}{100} < \frac{10800+18x}{100}$ $\div 100 \Rightarrow 30x+7200 < 10800+18x$ $\Rightarrow 30x-18x < 10800-7200$ $\Rightarrow 12x < 3600$ $\div 12 \Rightarrow x < 300$

$\Rightarrow x \in (120,300)$

15 விழுக்காட்டிற்கும் 18 விழுக்காட்டிற்கும் இடைப்பட்ட அடர்த்தி கொண்ட அமிலத்தின் அளவு $= 120$லிட்டர்$< x < 300$லிட்டர்.

3. $f(x) = x^3-3px+2q$ ஆனது $g(x) = x^2+2ax+a^2$ ஆல் வகுபடும் எனில் $ap+q=0$ என நிறுவுக.

$f(x) \div g(x) \Rightarrow f(x) = (x+b)g(x), b \in R$

$\therefore\ x^3-3px+2q = (x+b)(x^2+2ax+a^2)$

$\Rightarrow x^3-3px+2q = x^3+(2a+b)x^2+(a^2+2ab)x+a^2b$

இருபுறமும் x^2, x-ன் கெழுக்கள் மற்றும் மாறிலி உறுப்புகளை ஒப்பிட,

$\Rightarrow 2a+b=0$ $\Rightarrow b=-2a$	$\Rightarrow a^2+2ab = -3p$ $\Rightarrow a^2+2a(-2a) = -3p$ $\Rightarrow a^2-4a^2 = -3p$ $\Rightarrow -3a^2 = -3p$ $\div(-3) \Rightarrow p = a^2$	$\Rightarrow 2q = a^2b$ $\Rightarrow 2q = a^2(-2a)$ $\Rightarrow 2q = -2a^3$ $\div 2 \Rightarrow q = -a^3$ $\Rightarrow q = -a(a^2)$ $\Rightarrow q = -a(p)$ $\Rightarrow ap+q=0$

4. அறுதியில்லாக் கெழுக்கள் வழிமுறையைப் பயன்படுத்தி $1+2+3+\cdots(n-1)+n, n \in N$-ன் கூடுதல் காண்க.

$S(n) = a+bn+cn^2;\ a,b,c \in R$ என்க.

$S(n) = 1+2+3+\cdots+(n-1)+n \rightarrow (1)$

$S(n+1) = 1+2+3+\cdots+(n-1)+n+(n+1) \rightarrow (2)$

$(2)-(1) \Rightarrow S(n+1)-S(n) = n+1$

$\Rightarrow a+b(n+1)+c(n+1)^2-[a+bn+cn^2] = n+1$

$\Rightarrow a+bn+b+cn^2+2cn+c-a-bn-cn^2 = n+1$

$\Rightarrow 2cn+(b+c) = n+1$

இருபுறமும் n-ன் கெழு மற்றும் மாறிலி உறுப்புகளை ஒப்பிட,

$\Rightarrow 2c = 1 \Rightarrow c = \frac{1}{2}$	$\Rightarrow b+c = 1$ $\Rightarrow b+\frac{1}{2} = 1$ $\Rightarrow b = \frac{1}{2}$	$S(n) = a+bn+cn^2$ $s(1) \Rightarrow a+b+c = 1$ $\Rightarrow a+\frac{1}{2}+\frac{1}{2} = 1$ $\Rightarrow a = 0$

$$S(n) = a+bn+cn^2 \Rightarrow S(n) = 0+\frac{1}{2}n+\frac{1}{2}n^2 = \frac{n+n^2}{2} = \frac{n(n+1)}{2}, n \in N$$

5. தீர்க்க: $\frac{x+1}{x+3} < 3$

$\frac{x+1}{x+3} < 3$

$\Rightarrow \frac{x+1}{x+3}-3 < 0 \Rightarrow \frac{x+1-3(x+3)}{x+3} < 0 \Rightarrow \frac{x+1-3x-9}{x+3} < 0$

$\Rightarrow \frac{-2x-8}{x+3} < 0$

$\div(-2) \Rightarrow \frac{x+4}{x+3} > 0$

$\frac{x+4}{x+3} > 0$ –ன் பூஜ்ஜியங்கள் $-4, -3$ ஆகும்.

இடைவெளிகள்: $(-\infty,-4), (-4,-3), (-3,\infty)$

x	$x+4$	$x+3$	$\frac{x+4}{x+3}$
$x=-4$	0	−	0
$(-\infty,-4)$	−	−	+
$(-4,-3)$	+	−	−
$(-3,\infty)$	+	+	+

$\therefore$ தீர்வுக்கணம் $= (-\infty,-4) \cup (-3,\infty)$

6. $\frac{x^3(x-1)}{(x-2)} > 0$ எனில் x-ன் அனைத்து மதிப்புகளையும் காண்க.

$\frac{x^3(x-1)}{(x-2)} > 0$-ன் பூஜ்ஜியங்கள் 0,1,2 ஆகும்.

இடைவெளிகள்: $(-\infty,0), (0,1), (1,2), (2,\infty)$

x	x^3	$x-1$	$x-2$	$\frac{x^3(x-1)}{(x-2)}$
$x=0$	0	−	−	0
$x=1$	+	0	−	0
$(-\infty,0)$	−	−	−	−
$(0,1)$	+	−	−	+
$(1,2)$	+	+	−	−
$(2,\infty)$	+	+	+	+

$\therefore$ தீர்வுக்கணம் $= (0,1) \cup (2,\infty)$

7. $\frac{2x-3}{(x-2)(x-4)} < 0$ என்ற அசமன்பாட்டை நிறைவு செய்யும் x-ன் அனைத்து மதிப்புகளையும் காண்க.

$\frac{2x-3}{(x-2)(x-4)} < 0$ -ன் பூஜ்ஜியங்கள் $\frac{3}{2}, 2, 4$ ஆகும்.

இடைவெளிகள்: $\left(-\infty,\frac{3}{2}\right), \left(\frac{3}{2},2\right), (2,4), (4,\infty)$

x	$2x-3$	$(x-2)$	$(x-4)$	$\frac{2x-3}{(x-2)(x-4)}$
$x=\frac{3}{2}$	0	−	−	0
$\left(-\infty,\frac{3}{2}\right)$	−	−	−	−
$\left(\frac{3}{2},2\right)$	+	−	−	+
$(2,4)$	+	+	−	−
$(4,\infty)$	+	+	+	+

$\therefore$ தீர்வுக்கணம் $= \left(-\infty,\frac{3}{2}\right) \cup (2,4)$

8. தீர்வு காண்க: $\frac{x^2-4}{x^2-2x-15} \le 0$

$\frac{x^2-4}{x^2-2x-15} \le 0 \Rightarrow \frac{(x+2)(x-2)}{(x-5)(x+3)} \le 0$

$\frac{(x+2)(x-2)}{(x-5)(x+3)} \le 0$ –ன் பூஜ்ஜியங்கள் $-3, -2, 2, 5$ ஆகும்.

இடைவெளிகள்: $(-\infty,-3), (-3,-2), (-2,2), (2,5), (5,\infty)$

x	$(x+2)$	$(x-2)$	$(x-5)$	$(x+3)$	$\frac{(x+2)(x-2)}{(x-5)(x+3)}$
$x=2$	+	0	−	+	0
$x=-2$	0	−	−	+	0
$(-\infty,-3)$	−	−	−	−	+
$(-3,-2)$	−	−	−	+	−
$(-2,2)$	+	−	−	+	+
$(2,5)$	+	+	−	+	−
$(5,\infty)$	+	+	+	+	+

$\therefore$ தீர்வுக்கணம் $= (-3,-2] \cup [2,5)$

9. பகுதி பின்னங்களாகப் பிரிக்கவும் $\frac{x+1}{x^2(x-1)}$

$\frac{x+1}{x^2(x-1)} = \frac{A}{x-1}+\frac{B}{x}+\frac{C}{x^2} \rightarrow (1)$

$\Rightarrow \frac{x+1}{x^2(x-1)} = \frac{Ax^2+Bx(x-1)+C(x-1)}{x^2(x-1)}$

$\Rightarrow x+1 = Ax^2+Bx(x-1)+C(x-1)$

$x=1$ எனில் $1+1 = A(1)^2+B(1)(0)+C(0) \Rightarrow A = 2$

$x = 0$ எனில் $0 + 1 = A(0)^2 + B(0)(0-1) + C(0-1)$

$\Rightarrow 1 = -C \Rightarrow C = -1$

$x = -1$ எனில்

$-1 + 1 = A(-1)^2 + B(-1)(-1-1) + C(-1-1)$

$\Rightarrow 0 = A + 2B - 2c \Rightarrow 2 + 2B - 2(-1) = 0$

$\Rightarrow 2B + 4 = 0 \Rightarrow B = -2$

$(1) \Rightarrow \frac{x+1}{x^2(x-1)} = \frac{2}{x-1} - \frac{2}{x} - \frac{1}{x^2}$

10.பகுதி பின்னங்களாகப் பிரிக்கவும் $\frac{2x}{(x^2+1)(x-1)}$

$\frac{2x}{(x^2+1)(x-1)} = \frac{A}{x-1} + \frac{Bx+C}{x^2+1} \to (1)$

$\Rightarrow \frac{2x}{(x^2+1)(x-1)} = \frac{A(x^2+1)+(Bx+C)(x-1)}{(x^2+1)(x-1)}$

$\Rightarrow 2x = A(x^2+1) + (Bx+C)(x-1)$

$x = 1$ எனில் $2(1) = A(1^2+1) + [B(1)+c](1-1)$

$\Rightarrow 2 = 2A \Rightarrow A = 1$

$x = 1$ எனில் $2(0) = A(0+1) + [B(0)+c](0-1)$

$\Rightarrow 0 = A - C \Rightarrow 0 = 1 - C \Rightarrow C = 1$

$x = -1$ எனில்

$2(-1) = A[(-1)^2+1] + [B(-1)+c](-1-1)$

$\Rightarrow -2 = 2A + [-B+C](-2) \;\Rightarrow -2 = 2A + 2B - 2C$

$\Rightarrow -2 = 2(1) + 2B - 2(1) \Rightarrow -2 = 2 + 2B - 2$

$\Rightarrow 2B = -2 \Rightarrow B = -1$

$(1) \Rightarrow \frac{2x}{(x^2+1)(x-1)} = \frac{1}{x-1} + \frac{(-1)x+1}{x^2+1}$

$\Rightarrow \frac{2x}{(x^2+1)(x-1)} = \frac{1}{x-1} + \frac{1-x}{x^2+1}$

11.பகுதி பின்னங்களாகப் பிரிக்கவும் $\frac{x}{(x^2+1)(x-1)(x+2)}$

$\frac{x}{(x^2+1)(x-1)(x+2)} = \frac{A}{x-1} + \frac{B}{x+2} + \frac{Cx+D}{x^2+1} \to (1)$

$\frac{x}{(x^2+1)(x-1)(x+2)} = \frac{A(x+2)(x^2+1)+B(x-1)(x^2+1)+(Cx+D)(x-1)(x+2)}{(x^2+1)(x-1)(x+2)}$

$x = A(x+2)(x^2+1) + B(x-1)(x^2+1) + (Cx+D)(x-1)(x+2)$

$x = 1$ எனில் $1 = A(3)(2) + B(0)(2) + (cx+D)(0)(3)$

$$\Rightarrow 6A = 1 \Rightarrow A = \frac{1}{6}$$

$x = -2$ எனில்

$-2 = A(0)(5) + B(-3)(5) + [C(-2)+D](-3)(0)$

$\Rightarrow -2 = -15B \Rightarrow B = \frac{2}{15}$

$x = 0$ எனில்

$0 = A(2)(1) + B(-1)(1) + [C(0)+D](-1)(2)$

$\Rightarrow 2A - B - 2D = 0 \Rightarrow \frac{2}{6} - \frac{2}{15} - 2D = 0 \Rightarrow \frac{3}{15} = 2D$

$\Rightarrow D = \frac{3}{30} \Rightarrow D = \frac{1}{10}$

$x = -1$ எனில்

$-1 = A(1)(2) + B(-2)(2) + [C(-1)+D](-2)(1)$

$\Rightarrow 2A - 2B + 2C - 2D = -1$

$\Rightarrow 2\left(\frac{1}{6}\right) - 4\left(\frac{2}{15}\right) + 2C - 2\left(\frac{1}{10}\right) = -1 \Rightarrow 2C = -\frac{3}{5}$

$\Rightarrow C = -\frac{3}{10}$

$\therefore (1) \Rightarrow \frac{x}{(x^2+1)(x-1)(x+2)} = \frac{1}{6(x-1)} + \frac{2}{15(x+2)} + \frac{-\frac{3}{10}x+\frac{1}{10}}{x^2+1}$

$\frac{x}{(x^2+1)(x-1)(x+2)} = \frac{1}{6(x-1)} + \frac{2}{15(x+2)} + \frac{-3x+1}{10(x^2+1)}$

12.பகுதி பின்னங்களாகப் பிரிக்கவும் $\frac{x}{(x-1)^3}$

$\frac{x}{(x-1)^3} = \frac{A}{x-1} + \frac{B}{(x-1)^2} + \frac{C}{(x-1)^3} \to (1)$

$\frac{x}{(x-1)^3} = \frac{A(x-1)^2+B(x-1)+C}{(x-1)^3}$

$x = A(x-1)^2 + B(x-1) + C$

$x = 1$ எனில் $1 = C$

$x = 0$ எனில் $0 = A - B + C \Rightarrow A - B = -1 \to (2)$

$x = -1$ எனில் $-1 = 4A - 2B + C \Rightarrow 2A - B = -1 \to (3)$

சமன் $(2),(3)$ -ஐத் தீர்க்க கிடைப்பது, $A = 0$ மற்றும் $B = 1$

$\therefore (1) \Rightarrow \frac{x}{(x-1)^3} = \frac{1}{(x-1)^2} + \frac{1}{(x-1)^3}$

13.பகுதி பின்னங்களாகப் பிரிக்கவும் $\frac{x^2+x+1}{x^2-5x+6}$

(தொகுதியின் படி=பகுதியின் படி)

$x^2 - 5x + 6)\; x^2 + x + 1 \;(1$

$\qquad x^2 - 5x + 6$

$\qquad\quad 6x - 5$

$\frac{x^2+x+1}{x^2-5x+6} = 1 + \frac{6x-5}{x^2-5x+6} \to (1)$

$\frac{6x-5}{x^2-5x+6} = \frac{6x-5}{(x-2)(x-3)} = \frac{A}{x-2} + \frac{B}{x-3} \to (2)$

$\frac{6x-5}{x^2-5x+6} = \frac{A(x-3)+B(x-2)}{(x-2)(x-3)}$

$6x - 5 = A(x-3) + B(x-2)$

$x = 3$ எனில் $18 - 5 = 0 + B(1) \Rightarrow B = 13$

$x = 2$ எனில் $12 - 5 = A(-1) + 0 \Rightarrow A = -7$

$(2) \Rightarrow \frac{6x-5}{x^2-5x+6} = -\frac{7}{x-2} + \frac{13}{x-3}$

$(1) \Rightarrow \frac{x^2+x+1}{x^2-5x+6} = 1 - \frac{7}{x-2} + \frac{13}{x-3}$

14.பகுதி பின்னங்களாகப் பிரிக்கவும் $\frac{x^3+2x+1}{x^2+5x+6}$

$\because$ தொகுதியின் படி $>$ பகுதியின் படி

$x^2 + 5x + 6)\,x^3 + 0x^2 + 2x + 1 \;(x - 5$

$\qquad x^3 + 5x^2 + 6x$

$\qquad\quad -5x^2 - 4x + 1$

$\qquad\quad -5x^2 - 25x - 30$

$\qquad\qquad 21x + 31$

$\frac{x^3+2x+1}{x^2+5x+6} = (x-5) + \frac{21x+31}{x^2+5x+6} \to (1)$

$\frac{21x+31}{x^2+5x+6} = \frac{21x+31}{(x+2)(x+3)} = \frac{A}{x+2} + \frac{B}{x+3} \to (2)$

$\frac{21x+31}{x^2+5x+6} = \frac{A(x+3)+B(x+2)}{(x+2)(x+3)}$

$21x + 31 = A(x+3) + B(x+2)$

$x = -3$ எனில் $-63 + 31 = 0 + B(-1) \Rightarrow B = 32$

$x = -2$ எனில் $-42 + 31 = A(1) + 0 \Rightarrow A = -11$

$(2) \Rightarrow \frac{21x+31}{x^2+5x+6} = -\frac{11}{x+2} + \frac{32}{x+3}$

$(1) \Rightarrow \frac{x^3+2x+1}{x^2+5x+6} = (x-5) + -\frac{11}{x+2} + \frac{32}{x+3}$

15.பகுதி பின்னங்களாகப் பிரிக்கவும் $\frac{6x^2-x+1}{x^3+x^2+x+1}$

$x^3 + x^2 + x + 1 = x^2(x+1) + 1(x+1) = (x+1)(x^2+1)$

$\frac{6x^2-x+1}{x^3+x^2+x+1} = \frac{6x^2-x+1}{(x+1)(x^2+1)} = \frac{A}{x+1} + \frac{Bx+C}{x^2+1} \to (1)$

$\frac{6x^2-x+1}{x^3+x^2+x+1} = \frac{A(x^2+1)+[Bx+C](x+1)}{(x+1)(x^2+1)}$

$6x^2 - x + 1 = A(x^2+1) + [Bx+C](x+1)$

$x = -1$ எனில் $6 + 1 + 1 = A(2) + 0 \Rightarrow 2A = 8 \Rightarrow A = 4$

$x = 0$ எனில் $1 = A + C \Rightarrow 4 + C = 1 \Rightarrow C = -3$

இருபுறமும் x^2 –ன் கெழுக்களை சமன்படுத்த, $6 = A + B \Rightarrow 6 = 4 + B \Rightarrow B = 2$

$(1) \Rightarrow \frac{6x^2-x+1}{x^3+x^2+x+1} = \frac{4}{x+1} + \frac{2x-3}{x^2+1}$

16. $x + y \geq 3, 2x - y \leq 5$ மற்றும் $-x + 2y \leq 3$ ஆகிய அசமன்பாடுகளின் தொகுப்பிற்கு வரைபடப் பகுதியாகத் தீர்வு காண்க.

$x + y = 3, 2x - y = 5$ மற்றும் $-x + 2y = 3$ ஆகிய மூன்று கோடுகளையும் வரைக.

$x + y = 3$

x	0	1
y	3	2

$2x - y = 5$

x	0	1
y	-5	-3

$-x + 2y = 3$

x	1	3
y	2	3

$(0,0)$ -வை $x+y\geq 3$-இல் பிரதியிட $0\geq 3$ எனக் கிடைக்கிறது.இது உண்மையல்ல.

எனவே $(0,0)$ அடங்காத பகுதியை நிழலிடுக, இதுவே $x+2y>3$-ன் தீர்வுப்பகுதியாகும்.

$(0,0)$ -வை $2x-y\leq 5$ -இல் பிரதியிட $0\leq 5$ எனக் கிடைக்கிறது.இது உண்மை.

எனவே $(0,0)$ அடங்கும் பகுதியை நிழலிடுக, இதுவே $2x-y\leq 5$-ன் தீர்வுப்பகுதியாகும்.

$(0,0)$ -வை $-x+2y\leq 3$ -இல் பிரதியிட $0\leq 3$ எனக் கிடைக்கிறது.இது உண்மை.

எனவே $(0,0)$ அடங்கும் பகுதியை நிழலிடுக, இதுவே $-x+2y\leq 3$-ன் தீர்வுப்பகுதியாகும்.

இப்பொழுது மூன்று பகுதிகளுக்கும் பொதுவான பகுதியே கொடுக்கப்பட்ட ஒருபடி அசமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வுக்கணமாகும்.



17. $2x+3y\leq 6, x+4y\leq 4, x\geq 0, y\geq 0$ ஆகிய அசமன்பாடுகள் குறிக்கும் பகுதியைக் காண்க.

$2x+3y=6, x+4y=4$ ஆகிய இரண்டு நேர்க்கோடுகளையும் வரைக.

$2x+3y=6$

x	0	3
y	2	0

$x+4y=4$

x	0	4
y	1	0

$(0,0)$ -வை $2x+3y\leq 6$-இல் பிரதியிட $0\leq 6$ எனக் கிடைக்கிறது. இது உண்மை. எனவே $(0,0)$ அடங்கும் பகுதியை நிழலிடுக, இதுவே $2x+3y\leq 6$-ன் தீர்வுப்பகுதியாகும்.

$(0,0)$ -வை $x+4y\leq 4$-இல் பிரதியிட $0\leq 4$ எனக் கிடைக்கிறது. இது உண்மை. எனவே $(0,0)$ அடங்கும் பகுதியை நிழலிடுக, இதுவே $x+4y\leq 4$-ன் தீர்வுப்பகுதியாகும்.

$x\geq 0, y\geq 0$ என்பன முதல்கால் பகுதி முழுவதையும் குறிக்கும்.

இப்பொழுது நான்கு பகுதிகளுக்கும் பொதுவான பகுதியே கொடுக்கப்பட்ட ஒருபடி அசமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வுக்கணமாகும்.



18. $2x+y\geq 8, x+2y\geq 8, x+y\leq 6$ ஆகிய அசமன்பாடுகள் குறிக்கும் பகுதியைக் காண்க.

$2x+y=8, x+2y=8, x+y=6$ ஆகிய நேர்க்கோடுகளை வரைக.

$2x+y=8$

x	0	4
y	8	0

$x+2y=8$

x	0	8
y	4	0

$x+y=6$

x	0	6
y	6	0

$(0,0)$ -வை $2x+y\geq 8$-இல் பிரதியிட $0\geq 8$ எனக் கிடைக்கிறது.இது உண்மையல்ல. எனவே $(0,0)$ அடங்காத பகுதியை நிழலிடுக, இதுவே $2x+y\geq 8$-ன் தீர்வுப்பகுதியாகும்.

$(0,0)$ -வை $x+2y\geq 8$ -இல் பிரதியிட $0\geq 8$ எனக் கிடைக்கிறது.இது உண்மையல்ல.

எனவே $(0,0)$ அடங்காத பகுதியை நிழலிடுக, இதுவே $x+2y\geq 8$-ன் தீர்வுப்பகுதியாகும்.

$(0,0)$ -வை $x+y\leq 6$ -இல் பிரதியிட $0\leq 6$ எனக் கிடைக்கிறது.இது உண்மை.

எனவே $(0,0)$ அடங்கும் பகுதியை நிழலிடுக, இதுவே $x+y\leq 6$ -ன் தீர்வுப்பகுதியாகும்.

இப்பொழுது மூன்று பகுதிகளுக்கும் பொதுவான பகுதியே கொடுக்கப்பட்ட ஒருபடி அசமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வுக்கணமாகும்.



19. $7-4\sqrt{3}$ –ன் வர்க்கமூலம் காண்க.

$\sqrt{7-4\sqrt{3}}=\sqrt{4+3-4\sqrt{3}}$

$=\sqrt{2^2+\sqrt{3}^2-2(2)\sqrt{3}}$

$=\sqrt{\left(2-\sqrt{3}\right)^2}$

$=2-\sqrt{3}\quad [\because \sqrt{7-4\sqrt{3}}>0]$

20.சுருக்குக: $\frac{1}{3-\sqrt{8}}-\frac{1}{\sqrt{8}-\sqrt{7}}+\frac{1}{\sqrt{7}-\sqrt{6}}-\frac{1}{\sqrt{6}-\sqrt{5}}+\frac{1}{\sqrt{5}-2}$

$\frac{1}{3-\sqrt{8}}=\frac{1}{3-\sqrt{8}}\times\frac{3+\sqrt{8}}{3+\sqrt{8}}=\frac{3+\sqrt{8}}{9-8}=3+\sqrt{8}$

$\frac{1}{\sqrt{8}-\sqrt{7}}=\frac{1}{\sqrt{8}-\sqrt{7}}\times\frac{\sqrt{8}+\sqrt{7}}{\sqrt{8}+\sqrt{7}}=\frac{\sqrt{8}+\sqrt{7}}{8-7}=\sqrt{8}+\sqrt{7}$

$\frac{1}{\sqrt{7}-\sqrt{6}}=\frac{1}{\sqrt{7}-\sqrt{6}}\times\frac{\sqrt{7}+\sqrt{6}}{\sqrt{7}+\sqrt{6}}=\frac{\sqrt{7}+\sqrt{6}}{7-6}=\sqrt{7}+\sqrt{6}$

$\frac{1}{\sqrt{6}-\sqrt{5}}=\frac{1}{\sqrt{6}-\sqrt{5}}\times\frac{\sqrt{6}+\sqrt{5}}{\sqrt{6}+\sqrt{5}}=\frac{\sqrt{6}+\sqrt{5}}{6-5}=\sqrt{6}+\sqrt{5}$

$\frac{1}{\sqrt{5}-2}=\frac{1}{\sqrt{5}-2}\times\frac{\sqrt{5}+2}{\sqrt{5}+2}=\frac{\sqrt{5}+2}{5-4}=\sqrt{5}+2$

$\frac{1}{3-\sqrt{8}}-\frac{1}{\sqrt{8}-\sqrt{7}}+\frac{1}{\sqrt{7}-\sqrt{6}}-\frac{1}{\sqrt{6}-\sqrt{5}}+\frac{1}{\sqrt{5}-2}$

$=3+\sqrt{8}-\left(\sqrt{8}+\sqrt{7}\right)+\sqrt{7}+\sqrt{6}-\left(\sqrt{6}+\sqrt{5}\right)+\sqrt{5}+2$

$=3+\sqrt{8}-\sqrt{8}-\sqrt{7}+\sqrt{7}+\sqrt{6}-\sqrt{6}-\sqrt{5}+\sqrt{5}+2=5$

21. $x=\sqrt{2}+\sqrt{3}$ எனில், $\frac{x^2+1}{x^2-2}$ –ன் மதிப்பைக் காண்க.

$x^2 = (\sqrt{2}+\sqrt{3})^2 = 2+3+2\sqrt{6} = 5+2\sqrt{6}$

$\frac{x^2+1}{x^2-2} = \frac{5+2\sqrt{6}+1}{5+2\sqrt{6}-2} = \frac{6+2\sqrt{6}}{3+2\sqrt{6}} \times \frac{3-2\sqrt{6}}{3-2\sqrt{6}}$

$= \frac{18-12\sqrt{6}+6\sqrt{6}-24}{9-24} = \frac{-6-6\sqrt{6}}{-15} = \frac{-3(2+2\sqrt{6})}{-15}$

$= \frac{2+2\sqrt{6}}{5}$

22. $\log\frac{75}{16} - 2\log\frac{5}{9} + \log\frac{32}{243} = \log 2$ என நிறுவுக.

$\log\frac{75}{16} - 2\log\frac{5}{9} + \log\frac{32}{243}$

$= \log 75 - \log 16 - 2[\log 5 - \log 9] + \log 32 - \log 243$

$= \log(3\times 25) - \log 16 - 2\log 5 + 2\log 9 + \log(2\times 16) - \log(81\times 3)$

$= \log 3 + \log 25 - \log 16 - \log 5^2 + \log 9^2 + \log 2 + \log 16 - \log 81 - \log 3$

$= \log 3 + \log 25 - \log 16 - \log 25 + \log 81 + \log 2 + \log 16 - \log 81 - \log 3$

$= \log 2$

23. $\log_2 x + \log_4 x + \log_{16} x = \frac{7}{2}$ எனில், x –ன் மதிப்பைக் காண்க.

$\log_2 x + \log_4 x + \log_{16} x = \frac{7}{2}$

$\Rightarrow \frac{1}{\log_x 2} + \frac{1}{\log_x 4} + \frac{1}{\log_x 16} = \frac{7}{2}$ (அடிமான மாற்று விதி)

$\Rightarrow \frac{1}{\log_x 2} + \frac{1}{\log_x 2^2} + \frac{1}{\log_x 2^4} = \frac{7}{2}$

$\Rightarrow \frac{1}{\log_x 2} + \frac{1}{2\log_x 2} + \frac{1}{4\log_x 2} = \frac{7}{2}$ (அடுக்கு விதி)

$\log_x 2 = a \to (1)$ என்க. $\Rightarrow \frac{1}{a} + \frac{1}{2a} + \frac{1}{4a} = \frac{7}{2}$

$\Rightarrow \frac{4+2+1}{4a} = \frac{7}{2} \Rightarrow \frac{7}{4a} = \frac{7}{2} \Rightarrow 4a = 2 \Rightarrow a = 2$

$(1) \Rightarrow \log_x 2 = a \Rightarrow \log_x 2 = 2 \Rightarrow x = 2^2 \Rightarrow x = 4$

24. $\log_8 x + \log_4 x + \log_2 x = 11$ எனில், x –ன் தீர்வுக் காண்க.

$\log_8 x + \log_4 x + \log_2 x = 11 \Rightarrow \frac{1}{\log_x 8} + \frac{1}{\log_x 4} + \frac{1}{\log_x 2} = 11$

$\Rightarrow \frac{1}{\log_x 2^3} + \frac{1}{\log_x 2^2} + \frac{1}{\log_x 2} = 11$

$\Rightarrow \frac{1}{3\log_x 2} + \frac{1}{2\log_x 2} + \frac{1}{\log_x 2} = 11$

$\log_x 2 = a \to (1)$ என்க. $\Rightarrow \frac{1}{3a} + \frac{1}{2a} + \frac{1}{a} = 11$

$\Rightarrow \frac{2+3+6}{6a} = 11 \Rightarrow \frac{11}{6a} = 11 \Rightarrow 6a = 1 \Rightarrow a = \frac{1}{6}$

$(1) \Rightarrow \log_x 2 = a \Rightarrow \log_x 2 = \frac{1}{6} \Rightarrow x^{1/6} = 2 \Rightarrow x = 2^6$

$\Rightarrow x = 64$

25. $\log 2 + 16\log\frac{16}{15} + 12\log\frac{25}{24} + 7\log\frac{81}{80} = 1$ என நிறுவுக.

$\log 2 + 16\log\frac{16}{15} + 12\log\frac{25}{24} + 7\log\frac{81}{80}$

$= \log 2 + 16\log 16 - 16\log 15 + 12\log 25 - 12\log 24 + 7\log 81 - 7\log 80$

$= \log 2 + 16\log 2^4 - 16\log(3\times 5) + 12\log 5^2 - 12\log(2^3\times 3) + 7\log 3^4 - 7\log(2^4\times 5)$

$= \log 2 + (16\times 4)\log 2 - 16\log 3 - 16\log 5 + (12\times 2)\log 5 - (12\times 3)\log 2 - 12\log 3 + (7\times 4)\log 3 - (7\times 4)\log 2 - 7\log 5$

$= \log 2 + 64\log 2 - 16\log 3 - 16\log 5 + 24\log 5 - 36\log 2 - 12\log 3 + 28\log 3 - 28\log 2 - 7\log 5$

$= 65\log 2 - 64\log 2 + 28\log 3 - 28\log 3 + 24\log 5 - 23\log 5$

$= \log 2 + \log 5 = \log 10 = 1$

26. $\frac{\log x}{y-z} = \frac{\log y}{z-x} = \frac{\log z}{x-y}$ எனில், $xyz = 1$ எனக் காண்க.

$\frac{\log x}{y-z} = \frac{\log y}{z-x} = \frac{\log z}{x-y} = k$ என்க.

$\Rightarrow \frac{\log x}{y-z} = k\,;\ \frac{\log y}{z-x} = k\,;\ \frac{\log z}{x-y} = k$

$\Rightarrow \log x = k(y-z) \Rightarrow \log x = ky - kz$

$\Rightarrow \log y = k(z-x) \Rightarrow \log y = kz - kx$

$\Rightarrow \log z = k(x-y) \Rightarrow \log z = kx - ky$

இருபுறமும் அனைத்தையும் கூட்டுக,

$\log x + \log y + \log z = ky - kz + kz - kx + kx - ky \Rightarrow \log xyz = 0$

$\Rightarrow \log xyz = \log 1 \Rightarrow xyz = 1$

27. $\log_2 x - 3\log_{1/2} x = 6$ –ன் தீர்வு காண்க.

$\log_2 x - 3\log_{1/2} x = 6$

$\Rightarrow \frac{1}{\log_x 2} - \frac{3}{\log_x \frac{1}{2}} = 6$ (அடிமான மாற்று விதி)

$\Rightarrow \frac{1}{\log_x 2} - \frac{3}{\log_x \frac{1}{2}} = 6$

$\Rightarrow \frac{1}{\log_x 2} - \frac{3}{\log_x 1 - \log_x 2} = 6$ (வகுத்தல் விதி)

$\Rightarrow \frac{1}{\log_x 2} - \frac{3}{0 - \log_x 2} = 6 \Rightarrow \frac{1}{\log_x 2} + \frac{3}{\log_x 2} = 6$

$\log_x 2 = a \to (1)$ என்க.

$\Rightarrow \frac{1}{a} + \frac{3}{a} = 6 \Rightarrow \frac{4}{a} = 6 \Rightarrow a = \frac{4}{6} \Rightarrow a = \frac{2}{3}$

$(1) \Rightarrow \log_x 2 = a \Rightarrow \log_x 2 = \frac{2}{3} \Rightarrow x^{2/3} = 2$

$\Rightarrow x = 2^{3/2} = \sqrt{2}^3 = 2\sqrt{2}$

4.சேர்ப்பியல் மற்றும் கணிதத் தொகுத்தறிதல்

1. A என்ற இடத்திலிருந்து B என்ற இடத்திற்கு செல்ல B_1, B_2 என்ற இரண்டு பேருந்து வழித்தடங்களும், T_1, T_2 என்ற இரண்டு இரயில் வழித்தடங்களும், மேலும் A_1 என்ற வான் வழித்தடமும் உள்ளது. B என்ற இடத்திலிருந்து C என்ற இடத்திற்கு செல்ல B'_1 என்ற ஒரு பேருந்து வழித்தடமும், T'_1, T'_2 என்ற இரண்டு இரயில் வழித்தடங்களும், மேலும் A'_1 என்ற வான் வழித்தடமும் உள்ளது. A என்ற இடத்திலிருந்து C என்ற இடத்திற்கு B என்ற இடம் வழியே ஒரே வழித்தடத்தை மீண்டும் பயன்படுத்தாமல் எத்தனை வழிகளில் செல்லலாம்?

$A \to B$	$B \to C$
B_1, B_2	B'_1
T_1, T_2	T'_1, T'_2
A_1	A'_1

∴மொத்த வழிகளின் எண்ணிக்கை$= (2\times 2) + (2\times 1) + (2\times 1) + (2\times 1) + (1\times 1) + (1\times 2)$

$= 4+2+2+2+1+2 = 13$

2. 1 –க்கும் 1000 –க்கு இடையே உள்ள (இரண்டையும் உள்ளடக்கிய) எண்களில் 2ஆலும் 5ஆலும் வகுபடாத எண்களின் எண்ணிக்கையை காண்க.

1 –க்கும் 1000 –க்கு இடையே உள்ள மொத்த எண்கள் $=$ 1000

2ஆல் வகுபடும் எண்களின் எண்ணிக்கை $n(A) = 500$

5ஆல் வகுபடும் எண்களின் எண்ணிக்கை $n(A) = 200$

2மற்றும் 5ஆல் வகுபடும் எண்களின் எண்ணிக்கை

$n(A\cap B) = 100 \quad [\because 1000 \div 10(2\times 5)]$

2 (அ) 5ஆல் வகுபடும் எண்களின் எண்ணிக்கை

$n(A\cup B) = n(A) + n(B) - n(A\cap B)$

$\Rightarrow n(A\cup B) = 500 + 200 - 100 = 600$

2ஆலும் 5ஆலும் வகுபடாத எண்களின் எண்ணிக்கையை$=$ $1000 - 600 = 400$

3. $LOTUS$ எனும் வார்த்தையில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி

$(i) L$ இல் ஆரம்பித்து அல்லது S இல் முடிக்கும் வகையில் எத்தனை எழுத்துச் சரங்கள் உள்ளன.

$(ii) L$ இல் துவங்கவோ மற்றும் S இல் முடிக்கவோ கூடாத எழுத்துச் சரங்களின் எண்ணிக்கையை காண்க.

$(i) L$ இல் ஆரம்பிக்கும் எழுத்து சரங்கள்:

இடம்	$1(L)$	2	3	4	5
வழிகளின் எண்ணிக்கை	1	4	3	2	1

வழிகளின் எண்ணிக்கை$n(A) = 1.4.3.2.1 = 24$

S இல் முடியும் எழுத்து சரங்கள்:

இடம்	1	2	3	4	$5(S)$
வழிகளின் எண்ணிக்கை	4	3	2	1	1

வழிகளின் எண்ணிக்கை$n(B) = 4.3.2.1.1 = 24$

L இல் ஆரம்பித்து அல்லது S இல் முடியும் எழுத்து சரங்கள்:

இடம்	$1(L)$	2	3	4	$5(S)$
வழிகளின் எண்ணிக்கை	1	3	2	1	1

வழிகளின் எண்ணிக்கை$n(A \cap B) = 1.3.2.1.1 = 6$

சேர்த்தல்-நீக்கல் கொள்கையின்படி,

$$n(A \cup B) = n(A) + n(B) - n(A \cap B)$$
$$n(A \cup B) = 24 + 24 - 6 = 42$$

(ii)இடம் 5, எழுத்து 5

இடம்	1	2	3	4	5
வழிகளின் எண்ணிக்கை	5	4	3	2	1

வழிகளின் எண்ணிக்கை$= 5.4.3.2.1 = 120$

L இல் துவங்கவோ மற்றும் S இல் முடிக்கவோ கூடாத எழுத்துச் சரங்களின் எண்ணிக்கையை$= 120 - 42 = 78$

4.நான்கு வெவ்வேறான இலக்கங்களைக் கொண்ட 4 −இலக்க எண்களை 1,2,3,4 மற்றும் 5 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கும்போது, கீழ்க்கண்டவற்றை காண்க.

(i) இவ்வாறான எத்தனை எண்களை உருவாக்கலாம்?

(ii) இவற்றில் எத்தனை எண்கள் இரட்டைப்படை?

(iii) இவற்றில் எத்தனை எண்கள் சரியாக 4 ஆல் வகுபடும்?

(i) எண்கள் 5 (1,2,3,4 மற்றும் 5) ; இலக்கங்கள் 4

5 எண்களை கொண்டு உருவாக்கப்படும் 4இலக்க எண்களின் எண்ணிக்கை$= 5P_4 = 5.4.3.2 = 120$

(ii)இரட்டைப்படை எண்கள் எனில் கடைசி இலக்கம் 2 (அ) 4 ஆக இருக்க வேண்டும்.

$$\underbrace{(\ )\ (\ )\ (\ )}_{4P_3}\underbrace{(2/4)}_{2P_1}$$

இரட்டைப்படை எண்களின் எண்ணிக்கை $= 4P_3 \times 2P_1 = (4.3.2)(2) = 48$

(iii)4 ஆல் வகுபடும் எண்ணாக இருக்க வேண்டுமெனில் கடைசி இரண்டு இலக்கங்கள் 4 ஆல் வகுபட வேண்டும். 1,2,3,4 மற்றும் 5 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி கிடைக்கும் 4 ஆல் வகுபடும் எண்ணகள் $= 12,24,32,52$ (4 வழிகள்)

$$\underbrace{(\ )\ (\ )}_{3P_2}\underbrace{(12/24/32/52)}_{4P_1}$$

4 ஆல் வகுபடும் எண்களின் எண்ணிக்கை $= 3P_2 \times 4P_1$
$= (3.2)(4) = 6.4 = 24$

5. "EQUATION" என்ற வார்த்தையில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி

(i)உயிரெழுத்துகள் ஒன்றாக வரும் வகையில் எத்தனை எழுத்துச் சரங்களை உருவாக்கலாம்?

(ii)உயிரெழுத்துகள் ஒன்றாக வராத வகையில் எத்தனை எழுத்துச் சரங்களை உருவாக்கலாம்?

(i)மொத்த எழுத்துகள் 8 (E, Q, U, A, T, I, O, N);

உயிரெழுத்துகள் 5 (E, U, A, I, O)

n வெவ்வேறான பொருட்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான m பொருட்கள் எப்பொழுதும் ஒன்றாக வரும் வகையில் உள்ள வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= m! \times (n - m + 1)!$

இங்கு $n = 8, m = 5$,

உயிரெழுத்துகள் ஒன்றாக வரும் வகையில் உள்ள எழுத்துச் சரங்களின் எண்ணிக்கை$= 5! \times (8 - 5 + 1)! = 5! \times 4! = (5.4.3.2.1)(4.3.2.1) = 120 \times 24 = 2880$

(ii)மொத்த எழுத்துகள் 8 (E, Q, U, A, T, I, O, N)

உயிரெழுத்துகள் ஒன்றாக வரும் மற்றும் வராத வகையில் உள்ள எழுத்துச் சரங்களின் எண்ணிக்கை$= 8P_8 = 8.7.6.5.4.3.2.1 = 40320$

உயிரெழுத்துகள் ஒன்றாக வராத வகையில் உள்ள எழுத்துச் சரங்களின் எண்ணிக்கை=

உயிரெழுத்துகள் ஒன்றாக வரும் மற்றும் வராத வகையில் உள்ள எழுத்துச் சரங்களின் எண்ணிக்கை − உயிரெழுத்துகள் ஒன்றாக வரும் வகையில் உள்ள எழுத்துச் சரங்களின் எண்ணிக்கை$= 40320 - 2880 = 37440$

6.15 மாணவர்கள் எழுதும் ஒரு தேர்வில், 7 மாணவர்கள் கணிதத் தேர்வையும் மீதமுள்ள 8 மாணவர்கள் வெவ்வேறு பாடங்களுக்கான தேர்வையும் எழுதுகின்றனர். கணிதத் தேர்வு எழுதும் உந்த இரு மாணவர்களும் ஒரே வரிசையில் அடுத்தடுத்து இல்லாத வகையில் எத்தனை வழிகளில் அமரவைக்கலாம்?

GAP METHOD: $m = 8, n = 15; k = n - m = 15 - 8 = 7$,

வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= m! \times (m + 1)P_k = 8! \times (8 + 1)P_7 = 8! \times 9P_7$

$= 8! \times \frac{9!}{2!} = \frac{8! \times 9!}{2!}$ $\quad [\because\ nP_r = \frac{n!}{(n-r)!}]$

7.ஒரு வண்டியில் 8 இருக்கைகள் உள்ளன. முன்வரிசையில் 2 இருக்கைகளும் அதற்கு பின்புறம் இரண்டு வரிசைகளில் ஒவ்வொன்றிலும் 3 இருக்கைகள் உள்ளன. ஆந்த வண்டியானது ஏழு நபர்கள் $F, M, S_1, S_2, S_3, D_1, D_2$ உள்ள ஒரு குடும்பத்திற்கு சொந்தமானது.பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அக்குடும்பத்தை அந்த வண்டியில் எத்தனை வழிகளில் அமர வைக்கலாம்?

(i) எந்த கட்டுப்பாடும் இல்லாமல்

(ii) F அல்லது M வண்டியை ஓட்ட வேண்டும்

$(iii)F$ வண்டியை ஓட்டும்போது D_1, D_2 சன்னலோர இருக்கையில் அமர்ந்திருக்க வேண்டும்.

1 ▯ D

2 3 4 ; $D \rightarrow Driver\ seat$

5 6 7

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை= 7; இருக்கைகளின் எண்ணிக்கை= 8

(i)எந்த கட்டுப்பாடும் இல்லை:

7 பேரில் ஒருவர் ஓட்டுநர் இருக்கையில் அமருவதற்கான வழிகள்$= 7P_1 = 7$

மீதமுள்ள 7 இருக்கைகளில் 6 பேர் அமருவதற்கான வழிகள் $= 7P_6 = 7.6.5.4.3.2 = 5040$

மொத்த வழிகளின் எண்ணிக்கை$= 7 \times 5040 = 35280$

$(ii)F$ அல்லது M வண்டியை ஓட்ட வேண்டும்:

F (அ) M இருரில் ஒருவர் ஓட்டுநர் இருக்கையில் அமருவதற்கான வழிகள்$= 2P_1 = 2$

மீதமுள்ள 7 இருக்கைகளில் 6 பேர் அமருவதற்கான வழிகள் $= 7P_6 = 7.6.5.4.3.2 = 5040$

மொத்த வழிகளின் எண்ணிக்கை$= 2 \times 5040 = 10080$

$(iii)F$ வண்டியை ஓட்டும்போது D_1, D_2 சன்னலோர இருக்கையில் அமர்ந்திருக்க வேண்டும்:

சன்னலோர இருக்கைகளின் எண்ணிக்கை$= 5$

D_1, D_2 சன்னலோர இருக்கையில் அமருவதற்கான வழிகள்$= 5P_2 = 5.4 = 20$

F வண்டியை ஓட்டுவதால், மீதமுள்ள 5 இருக்கைகளில் 4 பேர் அமருவதற்கான வழிகள் $= 5P_4 = 5.4.3.2 = 120$

மொத்த வழிகளின் எண்ணிக்கை$= 20 \times 120 = 2400$

8.8 பெண்கள் மற்றும் 6 ஆண்கள் ஓர் வரிசையில் நிற்கிறார்கள்.

(i)எவரும் எந்த இடத்திலும் நிற்கலாம் என்ற வகையில் எத்தனை வழிகளில் நிற்கலாம்?

(ii)6 ஆண்களும் அடுத்தடுத்து வருமாறு எத்தனை வழிகளில் நிற்கலாம்?

(iii)எந்த இரு ஆண்களும் ஒன்றாக நிற்காமல் எத்தனை வழிகளில் நிற்கலாம்?

(i) 8 பெண்கள் மற்றும் 6 ஆண்கள் $= 14$ நபர்கள்

8 பெண்கள் மற்றும் 6 ஆண்கள் ஓர் வரிசையில் எந்த இடத்திலும் நிற்கலாம் என்பதற்கான வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= 14P_{14} = 14!$

(ii) STRING METHOD: $m = 6, n = 8 + 6 = 14$

வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= m! \times (n - m + 1)! =$ $6! \times (14 - 6 + 1) \quad = 6! \times 9!$

(iii) GAP METHOD: $m = 8, n = 14, K = n - m = 6$

வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= m! \times (m + 1)P_k$ $= 8! \times 9P_6$

9.INTERMEDIATE என்ற வார்த்தையில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு எத்தனை எழுத்துச் சரங்களை உருவாக்கலாம்?

(i) உயிர் எழுத்துகள் மற்றும் மெய் எழுத்துகள் அடுத்தடுத்து வருமாறு

(ii) எல்லா உயிரெழுத்துகளும் ஒன்றாக வருமாறு

(iii) உயிரெழுத்துகள் ஒன்றாக வராத வகையில்

(iv) எந்த இரு உயிரெழுத்துகளும் ஒன்றாக வராத வகையில்

மொத்த எழுத்துகளின் எண்ணிக்கை$= 12$

உயிரெழுத்துகளின் எண்ணிக்கை$= 6$ (I, E, E, I, A, E); இரண்டு I, மூன்று E உள்ளது.

மெய் எழுத்துகளின் எண்ணிக்கை$= 6$ (N, T, R, M, D, T); இரண்டு T உள்ளது.

(i)ஒரு உயிரெழுத்து மற்றும் ஒரு மெய் எழுத்து அடுத்தடுத்து வருமாறு:

உயிரெழுத்துகளின் வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$=$ $\frac{6!}{2!\times 3!} = \frac{6.5.4.3.2.1}{(2.1)(3.2.1)} = 60$

மெய் எழுத்துகளின் வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= \frac{6!}{2!} =$ $\frac{6.5.4.3.2.1}{(2.1)} = 360$

மொத்த வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை $= 2!\,(60 \times 360) = 43200$

($\because$ முதலில் உயிரெழுத்து பின்னர் மெய் எழுத்து (அ) முதலில் மெய் எழுத்து பின்னர் உயிரெழுத்து என 2 வழிகள் உள்ளதனால் $2!$ வரும்)

(ii) STRING METHOD: உயிரெழுத்துகளின் எண்ணிக்கை$m = 6; n = 12$

மொத்த வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= m! \times (n - m + 1)! = 6! \times 7!$

இரண்டு I, மூன்று E மற்றும் இரண்டு T உள்ளதால்,

தேவையான வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= \frac{6!\times 7!}{2!\times 3!\times 2!} =$ $\frac{720\times 5040}{2\times 6\times 2} = 151200$

(iii) 12 எழுத்துகளையும் கொண்ட வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= \frac{12!}{2!\times 3!\times 2!}$

$= 19958400$ ($\because$இரண்டு I, மூன்று E மற்றும் இரண்டு T உள்ளதால்)

தேவையான வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை=12 எழுத்துகளையும் கொண்ட வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை $-$ எல்லா உயிரெழுத்துகளும் ஒன்றாக வருமாறு உள்ள வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை

$= 19958400 - 151200 = 19807200$

(iv) GAP METHOD: $m = 6, n = 12, K = n - m = 6$

வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= m! \times (m + 1)P_k = 6! \times 7P_6$

இரண்டு I, மூன்று E மற்றும் இரண்டு T உள்ளதால்,

தேவையான வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை$= \frac{6!\times 7P_6}{2!\times 3!\times 2!} =$ $\frac{720\times 5040}{2\times 6\times 2} = 151200$

10.$1, 1, 2, 3, 3$ மற்றும் 4 என்ற இலக்கங்கள் தனித்தனியாக அட்டையில் எழுதப்பட்டுள்ளது. ஒரு 6 $-$இலக்க எண்ணை அமைக்க இந்த ஆறு அட்டைகளையும் வரிசைப்படுத்தும்போது

(i) எத்தனை வெவ்வேறான 6 $-$இலக்க எண்களை உருவாக்கலாம்?

(ii) இவற்றில் எத்தனை 6 $-$இலக்க எண்கள் இரட்டைப்படை?

(iii) இவற்றில் எத்தனை 6 $-$இலக்க எண்கள் 4ஆல் வகுபடும்?

1-ன் எண்ணிக்கை$= 2$; 3-ன் எண்ணிக்கை$= 2$

(i)1,1,2,3,3 மற்றும் 4 என்ற எண்களை கொண்டு உருவாக்கப்படும் 6 $-$இலக்க எண்களின் எண்ணிக்கை$=$ $\frac{6!}{2!\times 2!} = \frac{720}{2} = 180$

(ii)இரட்டைப்படை எனில் 1ஆம் இடத்தில் 2 (அ) 4 வரும்.

$$\underbrace{(\ )\ (\ )\ (\ )\ (\ )\ (\ )}_{5!}\ \underbrace{(2/4)}_{1!}$$

வழிகளின் எண்ணிக்கை$= \frac{5!\times 1}{2!\times 2!} = 30$ ($\because$1-ன் எண்ணிக்கை$=$ 2; 3-ன் எண்ணிக்கை$= 2$)

இரட்டைப்படை எண்களின் எண்ணிக்கை$= 2 \times 30 = 60$

(iii) 4ஆல் வகுபடும் எனில் கடைசி 2 இலக்கங்கள் 12,24,32 ஆக இருக்க வேண்டும்.

கடைசி 2 இலக்கங்கள் 12 எனில் வழிகளின் எண்ணிக்கை$=$ $\frac{4!}{2!} = 12$ ($\because$3-ன் எண்ணிக்கை$= 2$)

கடைசி 2 இலக்கங்கள் 24 எனில் வழிகளின் எண்ணிக்கை$=$ $\frac{4!}{2!\times 2!} = 6$ ($\because$1-ன் எண்ணிக்கை$= 2$; 3-ன் எண்ணிக்கை$= 2$)

கடைசி 2 இலக்கங்கள் 32 எனில் வழிகளின் எண்ணிக்கை$=$ $\frac{4!}{2!} = 12$ ($\because$1-ன் எண்ணிக்கை$= 2$)

4ஆல் வகுபடும் எண்களின் எண்ணிக்கை$= 12 + 6 + 12 = 30$

11. GARDEN என்ற வார்த்தையில் உள்ள எழுத்துகளை வரிசை மாற்றத்திற்கு உட்படுத்திக் கிடைக்கும் எழுத்துச் சரங்களை ஆங்கில அகராதியில் உள்ளது போன்று வரிசைப்படுத்தும்போது, கீழ்க்காணும் வார்த்தைகளின் தரத்தைக் காண்க.

(i)$GARDEN$ $(ii)DANGER$

(i)

4	1	6	2	3	5
G	A	R	D	E	N
5!	4!	3!	2!	1!	0!
3	0	3	0	0	0

GARDEN என்ற வார்த்தையின் தரம்$= (3 \times 5!) + (3 \times 3!) + 1$ $= (3 \times 120) + (3 \times 6) + 1 = 360 + 18 + 1 = 379$

(ii)

2	1	5	4	3	6
D	A	N	G	E	R
5!	4!	3!	2!	1!	0!
1	0	2	1	0	0

$DANGER$ என்ற வார்த்தையின் தரம்

$= (1 \times 5!) + (2 \times 3!) + (1 \times 2!) + 1$

$= 120 + 12 + 2 + 1 = 135$

12. THING என்ற வார்த்தையில் உள்ள எழுத்துகளை வரிசை மாற்றத்திற்கு உட்படுத்தி எத்தனை எழுத்துச் சரங்களை பெறலாம். மேலும், இதனை ஆங்கில அகராதியில் உள்ளது போன்று வரிசைப்படுத்தும்போது 85ஆவது எழுத்துச் சரம் என்னவாக இருக்கும்?

4	3	1	2	5
N	I	G	H	T
4!	3!	2!	1!	0!
3	2	0	0	0

$NIGHT$ $-$ன் தரம்$= (3 \times 4!) + (2 \times 3!) + 1$

$= (3 \times 24) + (2 \times 6) + 1 = 72 + 12 + 1 = 85$

13. $TABLE$ என்ற வார்த்தையில் உள்ள எழுத்துகளை வரிசை மாற்றம் செய்து கிடைக்கும் எல்லா எழுத்துச் சரங்களையும் ஆங்கில அகராதியில் உள்ளபடி வரிசையாக அமைத்தால், கீழ்க்கண்ட வார்த்தைகளின் தரம் காண்க.

$(i) TABLE \ (ii) BLEAT$

(i)

5	1	2	4	3
T	A	B	L	E
4!	3!	2!	1!	0!
4	0	0	1	0

$TABLE$ என்ற வார்த்தையின் தரம்

$= (4 \times 4!) + 1(1!) + 1 = (4 \times 24) + 1 + 1$

$= 96 + 1 + 1 = 98$

(ii)

2	4	3	1	5
B	L	E	A	T
4!	3!	2!	1!	0!
1	2	1	0	0

$BLEAT$ என்ற வார்த்தையின் தரம்

$= (1 \times 4!) + (2 \times 3!) + (1 \times 2!) + 1$

$= 24 + 12 + 2 + 1 = 39$

14. $1, 2, 4, 6, 8$ என்ற இலக்கங்களை கொண்டு உருவாக்கப்படும் எல்லா 4 –இலக்க எண்களின் கூடுதலைக் காண்க.

இங்கு $n = 5, r = 4$

n பூச்சியமற்ற இலக்கங்களைக் கொண்டு உருவாகும் எல்லா r –இலக்க எண்களின் கூடுதல்$= \{n-1P_{r-1} \times$(இலக்கங்களின் கூடுதல்)$\times$ $1.1.1 \ldots .1(r$முறை$)\}$

தேவையான கூடுதல்

$= (5-1)P_{(4-1)}[1 + 2 + 4 + 6 + 8](1111)$

$= 4P_3 \times 21 \times 1111 = (4.3.2) \times 21 \times 1111$

$= 24 \times 21 \times 1111 = 559944$

15. 1,2,3,4 மற்றும் 5 என்ற இலக்கங்கள் மீண்டும் திரும்ப வராத வகையில் உருவாகும் எல்லா 4 –இலக்க எண்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

இங்கு $n = 5, r = 4$

n பூச்சியமற்ற இலக்கங்களைக் கொண்டு உருவாகும் எல்லா r –இலக்க எண்களின் கூடுதல்$= \{n-1P_{r-1} \times$(இலக்கங்களின் கூடுதல்)$\times$ $1.1.1 \ldots .1(r$முறை$)\}$

தேவையான கூடுதல்

$= (5-1)P_{(4-1)}[1 + 2 + 3 + 4 + 5](1111)$

$= 4P_3 \times 21 \times 1111 = (4.3.2) \times 15 \times 1111$

$= 24 \times 15 \times 1111 = 399960$

16. $0, 2, 5, 7, 8$ என்ற இலக்கங்கள் மீண்டும் திரும்ப வராத வகையில் உருவாகும் எல்லா 4 –இலக்க எண்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

இங்கு $n = 5, r = 4$

கொடுக்கப்பட்ட n இலக்கங்களில் 0 ஒரு இலக்கம் எனில், இவற்றைக் கொண்டு உருவாகும் r –இலக்க எண்களின் கூடுதல்$= \{n-1P_{r-1} \times$(இலக்கங்களின் கூடுதல்)$\times$ $1.1.1 \ldots .1(r$முறை$)\} - \{n-2P_{r-2} \times$(இலக்கங்களின் கூடுதல்)$\times$ $1.1.1 \ldots .1(r-1)$முறை$)\}$

$= (5-1)P_{(4-1)}[0 + 2 + 5 + 7 + 8](1111) - (5 - 2)P_{(4-2)}[0 + 2 + 5 + 7 + 8](1111)$

$= 4P_3 \times 22 \times 1111 - 3P_2 \times 22 \times 111$

$= (4.3.2)(22)(1111) - (3.2)(22)(111)$

$= 586608 - 14652 = 571956$

17. $(n+2)C_7 : (n-1)P_4 = 13 : 24$ எனில், n –ன் மதிப்பைக் காண்க.

$nC_r = \frac{n!}{r! \times (n-r)!}$; $nP_r = \frac{n!}{(n-r)!}$

$(n+2)C_7 : (n-1)P_4 = 13 : 24 \Longrightarrow \frac{(n+2)C_7}{(n-1)P_4} = \frac{13}{24}$

$\Longrightarrow \frac{(n+2)!}{(n-5)! \times 7!} \times \frac{(n-5)!}{(n-1)!} = \frac{13}{24}$

$\Longrightarrow \frac{(n+2)(n+1)n(n-1)!}{7.6.5.4.3.2.1} \times \frac{1}{(n-1)!} = \frac{13}{24}$

$\Longrightarrow (n+2)(n+1)n = \frac{13}{24} \times 7.6.5.4.3.2.1$

$\Longrightarrow (n+2)(n+1)n = 15.14.13 \Longrightarrow n = 13$

18.ஒரு வினாத்தாளில் உள்ள 8 வினாக்களில் 4 வினாக்கள் பகுதி அ-விலும் 4 வினாக்கள் பகுதி ஆ-விலும் உள்ளன. தேர்வு எழுதுபவர் 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவுசெய்யும் வகையில் எத்தனை வழிகளில் இதனைச் செய்யலாம்.

(i)இரு பகுதிகளிலிருந்தும் எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் எத்தனை வினாக்களை வேண்டுமானாலும் தேர்வு செய்யலாம்.

(ii)குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையாவது பகுதி அ-வில் இருந்து எழுத வேண்டும்.

(i)மொத்தம் உள்ள 8 வினாக்களிலிருந்து 5 வினாக்களை தேர்வு செய்யும் வழிகள்$= 8C_3 = \frac{8.7.6}{1.2.3} = 56$

(ii)

பகுதி அ	பகுதி ஆ	சேர்வுகளின் எண்ணிக்கை
2	3	$4C_2 \times 4C_3 = \frac{4.3}{1.2} \times \frac{4.3.2}{1.2.3} = 6 \times 4 = 24$
3	2	$4C_3 \times 4C_2 = \frac{4.3.2}{1.2.3} \times \frac{4.3}{1.2} = 4 \times 6 = 24$
4	1	$4C_4 \times 4C_1 = \frac{4.3.2.1}{1.2.3.4} \times \frac{4}{1} = 1 \times 4 = 4$
மொத்தம்		52

19. PROPOSITION எனும் வார்த்தையில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி 5 எழுத்துகளில் எத்தனை எழுத்துச் சரங்களை உருவாக்கலாம்?

மொத்த எழுத்துகள்$= 11; P$ –ன் எண்ணிக்கை$= 2; I$ –ன் எண்ணிக்கை$= 2$

O –ன் எண்ணிக்கை$= 3$; வெவ்வேறான எழுத்துகளின் எண்ணிக்கை$= 4\ (R, S, T, N)$

எழுத்துகளின் வாய்ப்புகள்	சேர்வுகளின் எண்ணிக்கை
P, R, O, S, I, T, N இல் இருந்து 5 வெவ்வேறான எழுத்துகள்	$7P_5 = 7.6.5.4.3 = 2520$
3 ஒரே எழுத்து கொண்டOOO –இல் 1 தொகுப்பு,PP, II –இல் இருந்து 1 சோடி	$1C_1 \times 2C_1 \times \frac{5!}{3!.2!} = 1 \times 2 \times \frac{5.4.3.2.1}{3.2.1.2.1} = 20$
3 ஒரே எழுத்து கொண்டOOO –இல் 1 தொகுப்பு, 2 வெவ்வேறான எழுத்துகள் (R, S, T, N, P, I)	$1C_1 \times 6C_2 \times \frac{5!}{3!} = 1 \times \frac{6.5}{1.2} \times \frac{5.4.3.2.1}{3.2.1} = 300$
PP, II, OO –இல் இருந்து 2 சோடி, $R, S, T, N, (P/I/O)$ – இல் 1 எழுத்து	$3C_2 \times 5C_1 \times \frac{5!}{2!.2!} = \frac{3.2}{1.2} \times 5 \times \frac{5.4.3.2.1}{1.2.1.2} = 450$
PP, II, OO –இல் இருந்து 1 சோடி, $R, S, T, N, (P/I/O), (P/I/O)$ – இல் 3 எழுத்து	$3C_1 \times 6C_3 \times \frac{5!}{2!} = 3 \times \frac{6.5.4}{1.2.3} \times \frac{5.4.3.2.1}{2.1} = 3600$
மொத்த சேர்வுகளின் எண்ணிக்கை	6890

20.5 ஆசிரியர்கள் மற்றும் 20 மாணவர்களில் இருந்து 2 ஆசிரியர்கள் மற்றும் 3 மாணவர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்படுகின்றது.எத்தனை வழிகளில் இதனைச் செய்யலாம்? மேலும் இவற்றில் கீழ்க்காணும் நிபந்தனைக்கு உட்பட்டு எத்தனை குழுக்களைக் காணலாம்?

(i)அக்குழுவில் ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் உள்ளவாறு.

(ii)அக்குழுவில் ஒரு குறிப்பிட்ட மாணவர் வராதவாறு.

5 ஆசிரியர்களில் 2 ஆசிரியர்கள் மற்றும் 20 மாணவர்களில் 3

மாணவர்களை தேர்வு செய்யும் வழிகள்= $5C_2 \times 20C_3$

$= \frac{5.4}{1.2} \times \frac{20.19.18}{1.2.3} = 11400$

(i) 1 குறிப்பிட்ட ஆசிரியர் போக மீதியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை= 4

4 ஆசிரியர்களில் 1 ஆசிரியர்கள் மற்றும் 20 மாணவர்களில் 3 மாணவர்களை தேர்வு செய்யும் வழிகள்= $4C_1 \times 20C_3$

$= 4 \times \frac{20.19.18}{1.2.3} = 4560$

(ii)குழுவில் இடம்பெறாத மாணவரின் எண்ணிக்கை= 1

5 ஆசிரியர்களில் 2 ஆசிரியர்கள் மற்றும் 19 மாணவர்களில் 3 மாணவர்களை தேர்வு செய்யும் வழிகள்= $5C_2 \times 19C_3$

$= \frac{5.4}{1.2} \times \frac{19.18.17}{1.2.3} = 9690$

21.52 சீட்டுகள் கொண்ட ஒரு சீட்டுக் கட்டிலிருந்து 5 சீட்டுகளைத் தேர்வு செய்யும் ஒவ்வொரு சேர்விலும் எப்பொழுதும் மூன்று ஏஸ்கள் உள்ளவாறு எத்தனை சேர்வுகள் இருக்கும் எனக் காண்க.

சீட்டு	எண்ணிக்கை	தேர்வு செய்ய வேண்டிய எண்ணிக்கை	சேர்வுகளின் எண்ணிக்கை
ஏஸ்	4	3	$4C_3 = \frac{4.3}{1.2} = 4$
மற்றவை	48	2	$48C_2 = \frac{48.47}{1.2} = 1128$
மொத்த சேர்வுகளின் எண்ணிக்கை			$4 \times 1128 = 4512$

22.7 இந்தியர்கள் மற்றும் 5 அமெரிக்கர்களில் இருந்து இந்தியர்கள் அதிக அளவில் இருக்கும்படியான 5 நபர்களைக் கொண்ட எத்தனை விதமான குழுக்களை அமைக்கலாம்?

இந்தியர்கள்(7)	அமெரிக்கர்கள்(5)	சேர்வுகளின் எண்ணிக்கை
5	0	$7C_5 \times 5C_0 = \frac{7.6.5.4.3}{1.2.3.4.5} \times 1 = 21$
4	1	$7C_4 \times 5C_1 = \frac{7.6.5.4}{1.2.3.4} \times 5 = 175$
3	2	$7C_3 \times 5C_2 = \frac{7.6.5}{1.2.3} \times \frac{5.4}{1.2} = 350$
மொத்த சேர்வுகளின் எண்ணிக்கை		546

23.8 ஆண்கள் மற்றும் 4 பெண்களில் இருந்து 7 பேர் கொண்ட குழு அமைக்கப்படுகின்றுது.கீழ்க்காணும் நிபந்தனையை பூர்த்தி செய்யும் வகையில் எத்தனை குழுக்களை அமைக்கலாம்.

(i) சரியாக 3 பெண்கள் இருக்குமாறு.

(ii) குறைந்தபட்சம் 3 பெண்கள் இருக்குமாறு.

(iii) அதிகபட்சம் 3 பெண்கள் இருக்குமாறு.

(i)

பெண்(4)	ஆண்(8)	சேர்வுகளின் எண்ணிக்கை
